முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2021 சனவரி

## (203) வணிகச் சட்டம்

(Business Law)

2021-03-20
பிற்பகல்
[1.45 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 08
வினாக்கள் : 07

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள **விடைப்புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த அதே **ஒரு மொழியிலேயே விடையளித்தல்** வேண்டும்.*

(4) *நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச்சொல் செவ்வை நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் **வரைவிலக்கணத்தின்** அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 01

*இல. **1.1** இலிருந்து **1.6** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** அடிப்படை உரிமைகள் தொடர்பான நியாயாதிக்கத்தைக் (jurisdiction) கொண்டுள்ள நீதிமன்றம் எது?

(1) நீதிவான் (Magistrate's) நீதிமன்றம்
(2) மாவட்ட (District) நீதிமன்றம்
(3) மேன்முறையீட்டு (Appeal) நீதிமன்றம்
(4) உச்ச (Supreme) நீதிமன்றம்

**1.2** பின்வரும் சட்டங்களில் இலங்கையின் பொதுச் சட்டமாக (common law) இருப்பது எது?

(1) கண்டியன் சட்டம்
(2) உரோமன் - டச்சுச் சட்டம்
(3) ஆங்கிலச் சட்டம்
(4) முஸ்லிம் சட்டம்

**1.3** பின்வருவனவற்றுள் CIF உடன்படிக்கை ஒன்றில் விற்பனையாளரால் கொள்வனவாளரிடம் சமர்ப்பிக்கப் படும் ஆவணம் எது?

(1) வார்நாமம் (Bill of lading)
(2) விலைப்பட்டியல் (Invoice)
(3) காப்புறுதிச் சான்றிதழ்
(4) மேலுள்ள யாவும்

**1.4** ஒப்பந்தச் சட்டத்தின்படி, “ஏற்பனவு (Acceptance)” தொடர்பான சரியான கூற்றைத் தெரிவு செய்க :

(1) ஏற்பனவு என்பது வழங்க முற்படுபவர் (offeror) ஒருவருக்கு வாங்க முற்படுபவர் (offeree) ஒருவரால் அளிக்கப்படும் நிபந்தனை இணக்கம் (conditional assent) ஆகும்.

(2) ஏற்பனவு என்பது வாங்க முற்படுபவர் ஒருவருக்கு வழங்க முற்படுபவர் ஒருவரால் அளிக்கப்படும் நிபந்தனை இணக்கம் ஆகும்.

(3) ஏற்பனவு என்பது வழங்க முற்படுபவருக்கு வாங்க முற்படுபவரால் அளிக்கப்படும் நிபந்தனையற்ற இணக்கம் (unconditional assent)ஆகும்.

(4) ஏற்பனவு என்பது வாங்க முற்படுபவருக்கு வழங்க முற்படுபவரால் அளிக்கப்படும் நிபந்தனையற்ற இணக்கம் ஆகும்.

**1.5** 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இணங்க, பணிப்பாளர் ஒருவராக நியமிக்கத் **தகுதியற்ற** நபர் பின்வருவனவற்றுள் யார்?

**(a)** 18 வயதிற்குட்பட்ட ஒரு நபர்

**(b)** புத்தி சுவாதீனமற்றவர் எனத் தீர்க்கப்பட்ட ஒரு நபர்

**(c)** மற்றொரு கம்பனியின் ஒரு பணிப்பாளர்

**(d)** விடுவிக்க முடியாதளவுக்கு வங்குரோத்தான ஒரு நபர்

மேலுள்ளவற்றுள், சரியான கூற்றுக்கள் :

(1) **(a)** யும் **(b)** யும் **(c)** யும் மாத்திரம்  (2) **(a)** யும் **(b)** யும் **(d)** யும் மாத்திரம்

(3) **(b)** யும் **(c)** யும் **(d)** யும் மாத்திரம்  (4) **(a)** யும் **(c)** யும் **(d)** யும் மாத்திரம்.

**1.6** பின்வருவனவற்றுள் “வார்நாமம்” தொடர்பில் **பிழையான** கூற்று எது?

(1) இது கப்பலேற்றப்பட்ட பொருட்களுக்கான பற்றுச்சீட்டு ஒன்றாகத் தொழிற்படுகிறது.

(2) இது சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் கொடுப்பனவு முறை ஒன்றாகும்.

(3) இது பொருட்களின் உரிமையை நிருபிக்கப் பயன்படுகிறது.

(4) இது பொருட்களின் அளவு, பருமன், நிறை ஆகியவற்றை உள்ளடக்கியது.

(02 புள்ளிகள் வீதம், 12 புள்ளிகள்)

*கீழே **1.7** தொடக்கம் **1.9** வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உமது விடையை (**சரியானது** / **தவறானது**) உரிய வினா இலக்கத்துடன் விடைப் புத்தகத்தில் குறிப்பிடுக.*

**1.7** தரப்பினரின் ஒப்பந்த இயலுமை (Contractual capacity) என்பது செல்லுபடியான ஒப்பந்தம் ஒன்றின் ஒரு கூறாகும்.

**1.8** உதவி புரியப்பட்ட ஒப்பந்தங்கள் பொதுவாக செல்லுபடியற்றதாகும், மேலும் அவை பராயமடையா தவர்களைக் கட்டுப்படுத்தாது.

**1.9** பணியிலுள்ள காலத்தில் பணியாளர் ஒருவரால் கையாடல் செய்யப்பட்ட எந்தவொரு பணத்தொகையையும் செலுத்தவேண்டிய பணிக்கொடைத் தொகையில் இருந்து கழிக்க முடியாது.

(01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)

***1.10** தொடக்கம் **1.14** வரையுள்ள வினாக்களுக்கு குறுகிய விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

**1.10** *"பொருட்கள் விற்பனை கட்டளைச் சட்டத்தின்" கீழ்* விற்பனையாளர் ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய இரண்டு (02) பரிகாரங்களைக் (remedies) குறிப்பிடுக.

**1.11** பொருட்கள் விற்பனைக்கான ஒப்பந்தமொன்றின் இரண்டு (02) அடிப்படைக் கூறுகளை (elements) குறிப்பிடுக.

**1.12** விருப்பறிவிப்பு (offer) ஒன்று நிராகரிக்கப்படும் இரண்டு (02) முறைகளைக் குறிப்பிடுக.

**1.13** பதிவுசெய்யப்பட்ட வர்த்தகக் குறியீடொன்றின் (Trademark) உரிமையாளர் ஒருவர் அனுபவிக்கக் கூடிய இரண்டு (02) உரிமைகளை (rights) நிரற்படுத்துக.

**1.14** சர்வதேச வர்த்தகப் பிணக்கு ஒன்றைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படக்கூடிய இரண்டு (02) பிரதான பிணக்குத் தீர்க்கும் முறைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A நிறைவு*

## பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 02

கோவிட் – 19 நோய்ப் பரவல் ஏற்பட்டதைத் தொடர்ந்து, மஞ்சள் (இலங்கையிலும் அதே போன்று ஆசியாவிலும் பயன்படுத்தப்படுகின்ற ஒரு பாரம்பரிய மசாலாப் பொருள்) ஆனது வைரஸ் தடுப்புப் பண்புகளைக் கொண்ட ஒரு பொருள் என பெரும்பாலான மக்கள் நம்புகின்றனர். இது இலங்கையின் உண்மையான மஞ்சள் தேவையை தானாகவே அதிகரித்துள்ளது. **சஞ்ஜய** என்பவர் மஞ்சளை விளைவிக்கின்ற ஒரு விவசாயி ஆவார். அவர் உள்நாட்டு விற்பனையாளரான **பண்டாவுக்கு** "இலங்கையில் விளைவிக்கப்பட்ட மஞ்சள்" என விபரிக்கப்பட்ட 500 மஞ்சள் மூட்டைகளை விற்பனை செய்வதற்கு இணக்கம் தெரிவித்திருந்தார். **பண்டா, சஞ்ஜயவின்** மஞ்சள் களஞ்சியத்திற்கு விஜயம் செய்தபோது, **சஞ்ஜயவினால்** மேலே விபரிக்கப்பட்டவாறான மஞ்சளின் மாதிரி **பண்டாவிற்குக்** காண்பிக்கப்பட்டது. இணங்கிக் கொள்ளப்பட்டவாறு 500 மூட்டைகள் மஞ்சள் **பண்டா**விற்கு விநியோகிக்கப்பட்டதன் பின்னர், அதில் 200 மூட்டைகள் மாத்திரமே தனக்குக் காட்டப்பட்ட மாதிரியை ஒத்திருந்த மஞ்சள் என்பதையும் மீதி 300 மூட்டைகளும் இலங்கையில் விளைவிக்கப்படாது, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மஞ்சள் என்பதையும் **பண்டா** கண்டறிந்தார்.

இதேவேளை, மற்றொரு கொள்வனவாளரான **அமரிஸ், சஞ்ஜயவிடமிருந்து** 1000 மூட்டைகள் மஞ்சளைக் கொள்வனவு செய்வதற்கு தொலைபேசி வாயிலாக **சஞ்ஜயவுடன்** ஒப்பந்தம் செய்துகொண்டார். அவர்களது தொலைபேசி உரையாடலில், **சஞ்ஜய,** தான் விற்பனை செய்யும் மஞ்சள் "இலங்கையில் விளைவிக்கப் பட்ட மஞ்சள்" என விபரித்திருந்தார். ஆயினும் **அமரிஸ்,** ஒருபோதும் மஞ்சள் மாதிரியைப் பார்க்கவில்லை. கட்டளை (ஓடர்) செய்யப்பட்ட மஞ்சள், விநியோகம் செய்யப்பட்ட பின்னர், அனைத்து மஞ்சள் மூட்டைகளும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை என்பதை **அமரிஸ்** கண்டறிந்துள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **சஞ்ஜய**விற்கு எதிராக **பண்டாவின்** சட்ட உரிமைகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **சஞ்ஜய**விற்கு எதிராக **அமரிஸின்** சட்ட உரிமைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

பொலநறுவையில் வசிக்கின்ற **சிறிபால** என்பவர் எருமை மாடுகளை வளர்ப்பதில் ஈடுபட்டுள்ளார். அவர் கொழும்பிற்கு அனுப்பும் பொருட்டு புகையிரதத் திணைக்களத்தின் பொலநறுவை நிலையத்தில் 10,000 தயிர் பானைகளை கையளித்திருந்தார். கொழும்புக்குச் செல்லும் வழியில், தயிர் பானைகளை ஏற்றிச் சென்ற புகையிரதம் துரதிஷ்டவசமாக கெக்கிராவ பிரதேசத்தின் புறநகர்ப் பகுதியிலுள்ள தொலைதூரப் பிரதேசமொன்றில் தடம்புரண்டது. புகையிரதப் பாதையை (தண்டவாளத்தை) சீர்செய்ய 4 முதல் 6 நாட்கள் வரை எடுக்கும் என்பதை உணர்ந்த புகையிரதத்தின் சாரதி, **சிறிபாலவை** தொடர்பு கொள்வதற்கான சகல சாத்தியமான முயற்சிகளை மேற்கொண்டும் அவை பலனளிக்கவில்லை. பின்னர், தயிர் பானைகளைக் கொண்டு செல்வதில் காணப்படும் தாமதம் காரணமாக தயிர் கெட்டுப் போகத் தொடங்கியதால், தயிரின் உண்மையான பெறுமதியையும் விடக் குறைந்த பெறுமதியில் புகையிரதத்தின் சாரதி சகல 10,000 தயிர் பானைகளையும் உள்ளூரில் விற்பனை செய்திருந்தார். அதன் பின்னர், 10,000 தயிர் பானைகளையும் விற்றதிலிருந்து கிடைத்த பணத்தை அந்த புகையிரதச் சாரதி **சிறிபாலவிற்கு** அனுப்பியிருந்தார். எவ்வாறாயினும், புகையிரதச் சாரதியால் தனக்கு ஏற்பட்ட நட்டத்தை வசூலிக்கும் பொருட்டு (claim) அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள **சிறிபால** திட்டமிட்டுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

**சிறிபாலவுக்கு** ஏற்பட்ட நட்டத்தை புகையிரதச் சாரதி செலுத்த வேண்டுமா என்பதை **ஆராய்க.**

(10 புள்ளிகள்)

## வினா 04

**A, B, C** ஆகியோர், திருமணங்கள் மற்றும் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் போன்ற நிகழ்வுகளைத் திட்டமிட்டு, அவற்றுக்குத் தேவையான சோடனை வேலைகளைச் செய்யும் பங்குடமை வியாபாரம் ஒன்றின் பங்காளர்களாவர். **A** என்பவர் **வரையறுக்கப்பட்ட PQ நிதி நிறுவனத்தி**டமிருந்து கடன் ஒன்றைப் பெற்றுக் கொள்வதன் மூலம் நிகழ்வுகள் மற்றும் கொண்டாட்டங்களுக்கு வாடகைக்கு விடும் நோக்கத்திற்காக வரவேற்று மண்டபம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு முன்மொழிவு ஒன்றைச் செய்துள்ளார். **B** என்பவர் **A** இனுடைய முன்மொழிவுக்கு தனது சம்மதத்தைத் தெரிவித்துள்ள அதே வேளை **C** என்பவர் சம்மதம் தெரிவிக்க மறுத்துள்ளார். கலந்துரையாடப்பட்டதன்படி, **A** யும் **B** யும் கடனைப் பெற்றுக் கொண்டதுடன் வரவேற்பு மண்டபம் ஒன்றையும் வாங்கியுள்ளனர். எவ்வாறாயினும், சில மாதங்களின் பின்னர், கோவிட் – 19 நோய்ப் பரவல் காரணமாக, நிகழ்வுகள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட சோடனை வேலைகளுக்கான கேள்வி குறைவடைந்ததுடன் பங்குடமையும் வங்குரோத்து நிலையை அடைந்திருந்தது. **வரையறுக்கப்பட்ட PQ நிதி நிறுவனமானது** சகல மூன்று பங்காளர்களையும் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிட்டு, கடனை வசூலிப்பதற்கான நடவடிக்கை ஒன்றைத் தாக்கல் செய்திருந்தது.

**C** என்பவர் கடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடாத காரணத்தால் **A** மற்றும் **B** ஆகியோரால் பெறப்பட்ட கடனைச் செலுத்துவதற்கு தான் பொறுப்பல்ல என்ற கண்ணோட்டத்தில் இருக்கிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **C** இனுடைய கண்ணோட்டத்தின் செல்லுபடித்தன்மையை **ஆராய்க.** (07 புள்ளிகள்)

(b) நீதிமன்றம் பங்குடமை ஒன்றைக் கலைக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் மூன்றைக் (03) **குறிப்பிடுக.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

கீழ்வரும் மாற்றுண்டியலைக் கவனத்தில் கொள்க :

2020.06.03

சேரல்: **சித்த ரணவக்க பெரேரா,**

**இல. 75, நாவல வீதி, ராஜகிரிய.**

**பெறப்பட்ட பெறுமதிக்காக எண்பதாயிரம் ரூபாய் (ரூபா 80,000/-) தொகையை ரஜீவ் சில்வாவுக்குச் செலுத்தவும். .**



ரஞ்சன் சிவகணேஷ்

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) மேலுள்ள மாற்றுண்டியலுடன் தொடர்புபட்டுள்ள பிரதான தரப்பினரை (parties) **அடையாளங்காண்க.**
(03 புள்ளிகள்)

(b) செல்லுபடியான மாற்றுண்டியல் ஒன்றின் நான்கு (04) அம்சங்களைக் (features) **குறிப்பிடுக.**
(04 புள்ளிகள்)

(c) மாற்றுண்டியல் ஒன்றிற்கும் காசோலை ஒன்றிற்குமிடையிலான வேறுபாடுகள் மூன்றினை (03) **அடையாளங்காண்க.**
(03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

கோவிட் – 19 உலகளாவிய தொற்றுப் பரவலுக்கு மத்தியில், இலத்திரனியல் ரீதியான பரிமாற்றத் தொடர்பு நாட்டிலுள்ள பொது மக்களின் அன்றாட வாழ்வில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியிருக்கின்ற அதே வேளை, இணையம் தொடர்பான குற்றங்களின் எண்ணிக்கையும் வெகுவாக உயர்ந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. இலங்கையில் தற்போதுள்ள சட்டக் கட்டமைப்பினுள் இத்தகைய சூழ்நிலைகளை கையாள்வதற்காக சட்ட அமுலாக்க அதிகாரிகள் தங்கள் மட்டத்தில் சிறப்பான முயற்சிகளை முன்னெடுக்கின்றனர். 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலத்திரனியல் பரிவர்த்தனைச் சட்டமானது இந்தத் துறையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு உதவும் பிரதான சட்டங்களில் ஒன்றாகும்.

மேலும், உலகளாவிய தொற்றுப் பரவல் காரணமாக, குறிப்பிட்ட சில பொருட்களை இலங்கைக்கு இறக்குமதி செய்வதில் கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. இதன் விளைவாக, பல வர்த்தகர்கள் பொருட்களை விற்பனை செய்யும்போது பல்வேறு முறைகேடுகளைச் செய்கின்றனர்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) இலங்கையில் உள்ள இலத்திரனியல் பரிவர்த்தனைச் சட்டத்தின் மூன்று (03) நோக்கங்களைக் (objectives) **குறிப்பிடுக**. (03 புள்ளிகள்)

(b) 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலத்திரனியல் பரிவர்த்தனைச் சட்டத்தின் பிரயோக நோக்கெல்லையிலிருந்து விலக்கப்பட்ட இரண்டு (02) உறுப்புரைகள் / சட்டச் சாதனங்களை (articles / legal instruments) **அடையாளங்காண்க.** (02 புள்ளிகள்)

(c) 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் மூன்று (03) தொழிற்பாடுகள் / கடமைகளை (functions / duties) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B நிறைவு*

## பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 07

(A) **தினு** மற்றும் **ராம்** இருவரும் 2020 அக்டோபர் 15 ஆந் திகதி தங்கள் திருமணத்தை நடத்தத் திட்டமிட்டிருந்ததுடன் 2020 சனவரி மாதம் ஹோட்டலுக்கான கட்டணத்தில் அரைவாசியை செலுத்தி கடற்கரையோரக் ஹோட்டல் ஒன்றையும் முன்பதிவு செய்திருந்தனர். இரு தரப்பினருக்குமிடையிலான உடன்படிக்கையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து எழுத்துபூர்வமாக எதுவும் இல்லை. ஆனால், முன்பதிவு செய்யும்போது செலுத்திய கட்டணத்திற்கான பற்றுச்சீட்டினை **தினு** பாதுகாப்பாக கோப்பு ஒன்றில் வைத்திருந்தார். எவ்வாறாயினும், நாட்டில் கோவிட் – 19 நோய்ப் பரவலின் இரண்டாவது அலை ஆரம்பித்ததன் காரணமாக, அரசாங்கமானது 2020 அக்டோபர் 13 ஆந் திகதி முதல் மறு அறிவித்தல் வரை எந்தவித தனிப்பட்ட கொண்டாட்டங்களும் இடம்பெறக்கூடாது என தடை விதித்திருந்தது. **தினுவும் ராமும்** திருமண வரவேற்பினை இரத்துச் செய்யவும், வெறுமனே திருமணப் பதிவினை மாத்திரம் அந்தத் திகதியில் மேற்கொள்ளவும் முடிவு செய்தனர். **தினுவின்** சகோதரர் **ஷாம்** திருமண ஜோடிக்கு கார் ஒன்றைப் பரிசளித்திருந்தார். எவ்வாறாயினும், **தினு** ஹோட்டல் முகாமையாளரைத் தொடர்புகொண்டு திருமண வரவேற்பு இரத்துச் செய்யப்பட்டமை பற்றி அறிவித்தபோது, அவர் திருமண ஜோடியால் முன்பதிவுக்காகச் செலுத்தப்பட்ட பணத்தை மீளளிக்க மறுத்திருந்தார்.

**ராம்** ஒரு IT பொறியியலாளராக இருப்பதுடன் அவர் **ஜனஹித காப்புறுதிக் கம்பனியிடமிருந்து** தனது புதிய காருக்கான மோட்டார் வாகனக் காப்புறுதிக்கு விண்ணப்பிக்க விருப்பம் கொண்டிருந்தார். விண்ணப்பப் படிவத்தை நிரப்பும்போது, அதில் *“காரைச் செலுத்தவுள்ள நீங்களோ அல்லது வேறு ஏதாவது நபரோ மோட்டார் கார் ஒன்றைச் செலுத்துவதுடன் தொடர்புடைய ஏதாவது குற்றத்திற்காக தண்டனை பெற்றிருக்கிறீர்களா?”* என வினவப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், **ராம்** தொழினுட்பக் குற்றம் ஒன்றிற்காக 5 ஆண்டுகள் தண்டனை பெற்றிருந்த போதிலும், மேலுள்ள கேள்விக்கு அவர் “இல்லை” எனப் பதிலளித்திருந்தார். **ஜனஹித காப்புறுதிக் கம்பனி** அவருடைய விண்ணப்பத்தை நிராகரித்திருந்தது.

இதற்கிடையில், அவர் **சஹானா காப்புறுதிக் கம்பனியிடமிருந்து** தனது காருக்காக ஒரு பூரண மோட்டார் காப்புறுதியை பெற்றுக் கொண்டார். எவ்வாறாயினும், காப்புறுதி பெற்றுக்கொண்ட சில மாதங்களின் பின்னர், அவரது கார் பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றின் காரணமாக சேதமடைந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **தினு** மற்றும் **ராம்** ஆகியோரால் முன்பதிவுக்காகச் செலுத்தப்பட்ட கொடுப்பனவு தொடர்பில் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பரிகாரங்களை (remedies) **ஆராய்க.** (07 புள்ளிகள்)

(b) **ராம்** இனால் செய்யப்பட்ட விண்ணப்பத்தை **ஜனஹித காப்புறுதிக் கம்பனியால்** நிராகரிக்க முடியுமா என்பது பற்றி **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(c) காருக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பில் **ராம்** இற்கு உள்ள சட்ட உரிமைகளை (legal rights) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(B) **ஹமீட்** என்பவர் ஒரு நடுத்தர அளவு சிறப்பங்காடியான **பூட்மார்ட்** இல் 2020 நவெம்பர் 15 ஆந் திகதியில் இருந்து காசாளர் ஒருவராகப் பணி புரிகின்றார். **பூட்மார்ட்** ஆனது 2 காசாளர்கள், 5 விற்பனைப் பிரதிநிதிகள், 1 பாதுகாப்பு அலுவலர், 1 தூய்மைப் பணியாளர் மற்றும் ஒரு முகாமையாளர் ஆகியோரை உள்ளடக்கிய 10 ஊழியர்களை மாத்திரம் கொண்டிருக்கிறது. 2021 மார்ச் 01 ஆந் திகதி, கணக்கீட்டு முறைமையின்படி **ஹமீட்டிடம்** இருக்க வேண்டிய மீதியைக் காட்டிலும் **ஹமீட்** இன் கைவசம் இருந்த காசு மீதி குறைவாக இருந்ததை முகாமையாளர் அவதானித்திருந்தார். **பூட்மார்ட்டின்** முகாமையாளர் முறையான உள்ளக ஒழுக்காற்று விசாரணை ஒன்றை நடத்தாது, திடீரென **ஹமீட்** மீது குற்றஞ்சுமத்தி அவனுடைய தொழிலை முடிவுறுத்தியதுடன் உடனடியாகவே அவ்விடத்தை விட்டுச் செல்லுமாறு **ஹமீட்டிடம்** கூறினார்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க ஊழியர்களின் தொழிலை முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் அடிப்படையில் **ஹமீட்டிற்கு** உள்ள சட்ட உரிமைகளை **ஆராய்க.**

(08 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C நிறைவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |